


07. 02. 2026

## தலைப்புச் செய்திகள்

1. மத்திய அரசின் உறுதியான நடவடிக்கையால் மாவோயிஸ்ட் தீவிரவாதம் முடிவுக்கு வருவதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. இந்தியா – அமெரிக்கா இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்திற்கான நெறிமுறைகள் எட்டப்பட்டதற்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

3.. தமிழக சட்டப்பேரவையில் வரும் நிதியாண்டிற்கான இடைக்கால நிதி நிலை அறிக்கை வரும் 17ஆம் தேதி தாக்கல் செய்யப்படுகிறது.

4. தமிழகத்தில் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட இளம்பெண்களுக்கு கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி திட்டம் செயல்படுத்தப்படுவதாக மாநில அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளார்..

5. ICC உலக கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியில் மும்பையில் இன்று இரவு 7 மணிக்கு இந்தியா அமெரிக்காவை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

*************

குடியரசு தலைவர்

மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கு எதிராக மத்திய அரசு மேற்கொண்டுள்ள உறுதியான நடவடிக்கையால் தீவிரவாத அச்சுறுத்தல் முடிவுக்கு வருவதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

சட்டிஸ்கட் மாநிலம் பஸ்தாரில் நிகழ்ச்சி ஒன்றில் இன்று உரையாற்றிய குடியரசு தலைவர், இப்பகுதியில் பாதுகாப்பின்மையும், நம்பிக்கையற்ற நிலையும், நிலவி வந்ததை எடுத்துரைத்தார்.

மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுடன் தொடர்பில் இருந்த பெருமளவிலான மக்கள் வன்முறைகளை கைவிட்டு, அமைதியான வாழ்க்கை நடைமுறைக்கு திரும்பியுள்ளதாக குறிப்பிட்டார்.

பல்வேறு நல திட்டங்களை மத்திய அரசு இவர்களுக்காக செயல்படுத்தி வருவதையும் குடியரசு தலைவர் சுட்டிக்காட்டினார்.

*************

வர்த்தக ஒப்பந்தம்

இந்தியா – அமெரிக்கா வர்த்தகம் தொடர்பான இடைக்கால ஒப்பந்தத்திற்கான கட்டமைப்பு நெறிமுறைகள் எட்டப்பட்டதற்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் இருநாடுகளுக்கிடையிலான ஆழமான பரஸ்பர நம்பிக்கையையும், திறமையையும் பறைசாற்றுவதாக பிரதமர் வெளியிட்ட சமூகவலைதள பதிவில் கூறியுள்ளார்.

இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்திற்கு இது வலு சேர்ப்பதோடு மகளிர் மற்றும் இளையோருக்கு பெரிய அளவிலான வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்றும் கூறியுள்ளார்.

சென்ற ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கப்பட்ட இந்த ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகள் மேலும் விரிவடைய இது வழிகோலும் என்று மத்திய வர்த்தக தொழில் அமைச்சகம் எடுத்துரைத்துள்ளது.

இதன்படி இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு 18 சதவிகித வரியை அமெரிக்கா நிர்ணயித்துள்ள அதேவேளையில் அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படும் உணவு மற்றும் வேளாண்

பொருட்களுக்கான வரியை இந்தியா குறைக்கவோ, நீக்கவோ வகை செய்யப்பட்டுள்ளது.

மத்திய வெளியுறவு அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் வெளியிட்ட செய்தியில் இந்த ஒப்பந்தம் நிறைவேறியதன் மூலம் இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு மிகப்பெரிய சந்தை வாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் வெளியிட்ட செய்தியில் இந்த வர்த்தக ஒப்பந்தம் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிபாதையில் மிக முக்கிய மைல் கல்லாகும் என்றார்.

இதன்மூலம் தொழிலாளர் பங்களிப்பு சார்ந்த துறைகள் மேலும் வலுப்படுவதுடன் ஏற்றுமதி வாய்ப்புகள் அதிகரிக்கும் என்று கூறினார்.

இந்திய - அமெரிக்க ஒப்பந்தம் நம் நாட்டு விவசாயிகளுக்கு முழு பாதுகாப்பை வழங்குவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு.ஹர்தீப்சிங்பூரி வெளியிட்டுள்ள செய்தியில் இருநாடுகளின் வளமான எதிர்காலத்திற்கு இது வழிகோலும் என்று கூறியுள்ளார்.

நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் அதிகரிப்பதோடு, புதிய கண்டுபிடிப்புகள், முதலீடுகள், நவீன தொழில்நுட்ப பங்களிப்பிற்கும் பெரிதும் பயனளிக்கும் என்றார்.

இந்த ஒப்பந்தம் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் விவசாயிகள் மீனவர்கள் மகளிர் இளையோருக்கான வாய்ப்புகளையும், ஏற்றுமதியையும் அதிகரிக்கும் என்று மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

மத்திய அமைச்சர்கள் திரு.நிதின்கட்கரி, திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா உள்ளிட்டோரும் இந்த ஒப்பந்தம் சார்ந்த நெறிமுறைகள் எட்டப்பட்டதற்கு பாராட்டு தெரிவித்துள்ளனர்.

*************

பிரதமர் - மலேசியா

இந்தியா – மலேசியா நாடுகள் இடையிலான ஒத்துழைப்பும் நட்புறவும் மேலும் வலுப்பெறும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

மலேசியாவிற்கு இரண்டு நாள் அரசு முறை பயணமாக சென்றுள்ள பிரதமர் புறப்படுவதற்கு முன்னர் இன்று வெளியிட்ட அறிக்கையில், ராணுவ பாதுகாப்பு, பொருளாதாரம், படைப்பாற்றல் திறன் பங்களிப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

இருநாடுகளுக்கிடையே ஒத்துழைப்பு அன்மை காலங்களில் அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டிய அவர், மலேசியாவில் உள்ள இந்திய வம்சாவளியினரை சந்திப்பதை எதிர்நோக்கி உள்ளதாக குறிப்பிட்டார்.

மலேசிய நாட்டின் வளர்ச்சிக்காக இந்திய வம்சாவளியினரின் அளப்பரிய பங்கை எடுத்துரைத்த பிரதமர் இருநாடுகளுக்கிடையே நட்புறவு பாலமாக அவர்கள் திகழ்கிறார்கள் என்று புகழாரம் சூட்டினார்.

*************

முருகன்

மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியை மேம்படுத்த வழிகோலுவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

புதுச்சேரியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் தரமான உற்பத்தி, வலிமையான கட்டமைப்புமேம்பாடு, விளிம்புநிலை மக்களின் வாழ்வாதார வளர்ச்சி, இளையோர் ஆளுமை, மகளிர் சார்ந்த மேம்பாட்டிற்கு இந்த பட்ஜெட் வழிவகை செய்வதாக குறிப்பிட்டார்.

உயிரி மருத்துவ திட்டத்திற்கு 10 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் பாரம்பரிய மருந்துகளின் உற்பத்தி அதிகரிக்கும் என்றார்.

செமி கண்டெக்டர் மற்றும் மீன்வளத்துறை வளர்ச்சிக்கும் பட்ஜெட் வகை செய்வதாக கூறினார்.

*************

தேவநேய பாவானர்

தமிழ் அறிஞர் தேவநேய பாவானரின் 124ஆவது பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில், செந்தமிழ் சொற்பிறப்பியல் அகர முதலி திட்டத்தை செயல்படுத்தியதுடன் தமிழின் தனித்தன்மையை பேணிக்காத்திட்ட அன்னாருக்கு தலைவணங்குவதாக தெரிவித்துள்ளார்.

மதுரை சாத்தமங்கலத்தில் உள்ள மணிமண்டபத்தில் நிறுவப்பட்டுள்ள அன்னாரது திருவுருவ சிலைக்கு மாநில வணிக வரித்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

ஆட்சித்தலைவர் திரு.பிரவீன்குமார் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

*************

நிதிநிலை அறிக்கை

தமிழக சட்டப்பேரவையில் 2026-27ம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை வரும் 17ஆம் தேதி சமர்ப்பிக்கப்பட உள்ளது.

முன்பண மானியக்கோரிக்கைகள் மற்றும் நடப்பு நிதியாண்டிற்கான கூடுதல் செலவின மானியக்கோாரிக்கைகள் வரும் 20ஆம் தேதி பேரவையில் தாக்கல் செய்யப்பட உள்ளதாக பேரவை தலைவர் திரு.அப்பாவு தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

*************

மா.சுப்பிரமணியன்

தமிழகத்தில் சுகாதாரத்தை பேணி காப்பதற்கான பல்வேறு சிறப்புத்திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கையில் நிகழ்ச்சி ஒன்றில் இன்று பேசிய அவர், பெண்களை அதிகம் பாதிக்கும் கருப்பை வாய் புற்றுநோயை தடுப்பதன் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 3 லட்சத்திற்கும் மேற்பட்ட இளம் பெண்களுக்கு தடுப்பூசி திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படுவதாக கூறினார்.

அரசின் நலன் காக்கும் இலவச மருத்துவ முகாம்கள் மூலம் 17 வகையான சிறப்பு மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு ஏராளமானோர் பயனடைந்து வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

*************

எம்.ஆர்.கே

தமிழக மக்களின் கனவுகளை வரும் 2030ம் ஆண்டிற்குள் நிறைவேற்றும் வகையில் உங்கள் கனவு திட்டம் செயல்படுத்தப்படுவதாக மாநில வேளாண் அமைச்சர் திரு. எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

கடலூரில் "என் ஊர் என் கனவு" கருத்தரங்கை இன்று துவக்கிவைத்து பேசிய அமைச்சர், பல்வேறு துறைகளில் சிறந்த விளங்கும் சாதனையாளர்களை ஒருங்கிணைத்து இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

அரசின் பல்வேறு துறை அலுவலர்கள் தனியார் நிபுணர்கள் அரசு சாரா அமைப்பு வல்லுநர்கள், சமூக ஆர்வலர்கள் தனி நபர்களை உள்ளடக்கி இத்தொலைநோக்கு பார்வை திட்ட முன்வரைவு தயார் செய்யப்பட்டுள்ளதாக எடுத்துரைத்தார்.

தனி மனிதர்கள் முன்னேற்றம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்தும் வகையில் கடலூர் மாவட்டத்தில் ஒரு லட்சத்து 90 ஆயிரம் குடும்ப அட்டை தாரர்களின் கனவுகளை கேட்டறிய 50 ஆயிரம் தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

*************

பறவை காய்ச்சல்

வேலூர் மாவட்டத்தில் பறவை காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரபடுத்தப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் டாக்டர் சுப்புலெட்சுமி தெரிவித்துள்ளார்.

வேலூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொதுமக்கள் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம் என்றும், அரசு அறிவுறுத்தல்களை பின்பற்றி பாதுகாப்பாக இருக்குமாறும் அறிவுறுத்தினார்.

வாய்ஸ்

*************

துரைசாமி

தமிழகத்தை உலகளாவிய உற்பத்தி மையமாக மேம்படுத்த, மத்திய நிதிநிலை அறிக்கை வழிவகை செய்துள்ளது என்று பிஜேபி மாநில துணை தலைவர் திரு.வி.பி.துரைசாமி கூறியுள்ளார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், உள்கட்டமைப்பு, மருத்துவம், தொழில், சமூகநலன் சார்ந்த திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

உயர்கல்வி பயிலும் பெண்களின் பாதுகாப்பிற்காக தமிழகத்தின் 38 மாவட்டங்களிலும் மாணவிகள் விடுதி, இரண்டு கேந்திரிய பள்ளிகள்

ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அம்ரித் பாரத் ரயில் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் 77 ரயில் நிலையங்கள் புதுப்பொலிவு பெறும் என்றும் எடுத்துரைத்தார்.

*************

இருவரி

நாட்டிலேயே முதல் முறையாக தூத்துக்குடி வ.உ.சி துறைமுகத்தில் ட்ரோன் தடுப்பு பாதுகாப்பு அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டம் ஆன்டிமடம் ஜெயங்கொண்டம் பகுதிகளில் மத்திய மாநில அரசு போட்டித்தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் வரும் புதன்கிழமைமுதல் நடைபெறும் என ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டத்தில் ஊர்காவல் படைக்கு ஆள் சேர்ப்பு முகாம் வரும் 14ஆம் தேதி மாவட்ட ஆயுதபடை வளாகத்தில் நடைபெறுகிறது.

10ஆம் வகுப்பு தேர்ச்சிபெற்ற 20 முதல் 40 வயதிற்குட்பட்டவர்கள் இன்றுமுதல் இதற்கு விண்ணப்பிக்கலாம் என காவல்துறை தெரிவித்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் மாவட்ட அளவிலான நீச்சல் போட்டிகள் இன்று நடைபெற்றன.

நெல்லை தூத்துக்குடி தென்காசி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த ஏராளமானோர் இதில் பங்கேற்றனர்.

*************

இளையோர் கிரிக்கெட் கோப்பை

இளையோர் உலக கோப்பை கிரிக்கெட் சேம்பியன் பட்டம் வென்ற இந்திய அணிக்கு ஏழரை கோடி ரூபாய் பரிசுதொகையை இந்திய கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

இறுதிபோட்டியில் 100 ரன்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை தோற்கடித்து அபார வெற்றியுடன் தொடர்ச்சியாக 6ஆவது முறையாக உலக கோப்பையை இந்திய அணி தக்க வைத்துக்கொண்டுள்ளது.

*************

கிரிக்கெட்

ICC உலக கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டிகள் இன்று தொடங்கின.

மும்பையில் இரவு 7 மணிக்கு இந்தியா தனது முதல் ஆட்டத்தில் அமெரிக்காவை எதிர்கொள்கிறது.

கொல்கத்தா ஈடன் கார்டன்ஸில் பிற்பகல் 3 மணிக்கு வெஸ்ட் இண்டிஸ் – ஸ்காட்லாந்துடன் மோதுகிறது.

கொழும்புவில் நெதர்லாந்துக்கு எதிரான முதல் போட்டியில் 148 ரன் வெற்றி இலக்குடன் விளையாடும் பாகிஸ்தான் 14 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 106 ரன் எடுத்திருந்தது.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது